

பாமாலை 277 மா தூய ஆவி ! இறங்கும்

மா தூய ஆவி ! இறங்கும்,
விண் தீபம் நெஞ்சில் ஏற்றிடும்;
ஞானாபிஷேக தைலம் நீர்
நல்வரம் ஏழும் ஈகிறீர்.

துக்கிக்கும் நெஞ்சைத் தேற்றவே
ஏராள அருள் பெய்யுமே;
மாற்றார் வராமல் காத்திடும்
சீர் வாழ்வு சுகம் ஈந்திடும்.

மெய் ஜீவன், ஆறுதல் , அன்பும்
உம் அபிஷேகம் தந்திடும்;
ஓயாத ஒளி வீசியே
உள்ளத்தின் மருள் நீக்குமே.

பிதா, குமாரன் , ஆவியும்
திரியேகர் என்ற பொதியும்;
யுக யுகங்களாகவே
உம் தாசர் பாடும் பாட்டிதே;
பிதா, சுதன், சுத்தாவி! உமக்கே
சதா நித்தியமும் ஸ்துத்தியமே !